
# மனதுக்கினிய பாட்டு



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதுக்கினிய பாட்டு

- சிறுவர் பாடல்கள் -

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : மனதுக்கினிய பாட்டு

நூல் வகை : சிறுவர் இலக்கியம்

ஆசிரியர் : ச. அருளானந்தம்

உரிமை : ஆசிரியருக்கு

எழுத்தமைப்பு : இ. சிவகுமார்

படங்கள் : ச.அ. அருள்பாஸ்கரன்

முதற் பதிப்பு : 24.01.2001

பதிப்பகமும் வெளியீடும் : அருள் வெளியீட்டகம்
37/7, மத்திய வீதி,
உவர்மலை,
திருகோணமலை.

விநியோகஸ்தர் : லங்கா புக் டிப்போ
F.L.1.14 டயஸ் பிளேஸ்
குணசிங்கபுர
கொழும்பு - 12

ISBN NO : 955 - 97106 - 3 -X

பக்கம் : 40

விலை : ரூபா.65.

## படையல்

**அனைத்துப் பிள்ளைகளையும், தன் பிள்ளைகள் போல் ஆதரவு காட்டும் அன்புள்ளம் கொண்ட எனது மனைவி திருமதி. மேரி லூர்து அருளானந்தம் அவர்களுக்கு இந்நூல் படையல்.**

**- ஆசிரியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"குழந்தையும் தெய்வமும் குணத்தாலொன்று" என்பது அறிஞர் கருத்தாகும். அந்த வகையில் குழந்தைகளின் மனோபாவங்களை அறிந்து அவர்களைப் போல் மாறி பாடல்கள் புனைவது, இலகுவான காரியமல்ல, குழந்தைகள் உண்மையிலே விசித்திரமானவர்கள் அடித்தால் அழுவார்கள், அணைத்தால் சிரிப்பார்கள். இவற்றை தனது அறிவு முதிர்வின் மூலம் புரிந்து திரு.ச.அருளானந்தம் அவர்கள் "மனதுக்கினிய பாட்டு" என்ற நூலாகத் தொகுத்து தந்துள்ளார். கிராமத்திலே பிறந்து கிராமியக் காற்றினைச் சுவாசித்து தான் கண்டு கொண்ட அத்தனை காட்சிகளையும் உள்வாங்கிக் கொண்டு பல இலக்கியங்களை யாத்துள்ளார். இந்நிலையில், இம் "மனதுக்கினிய பாடல்கள்" என்னும் நூலில் பொதிந்துள்ள விடயங்கள் பொருள் நிறைந்தனவாகவும், விளக்க பூர்வமானவையாகவும் விளங்குகின்றன. எமது சிறுவர்களுக்குத் தெரிந்துள்ள அல்லது தெரிந்திராத பல விடயங்களை இந்நூலாசிரியர் தனது நூலில் காட்ட முற்பட்டிருப்பதும் அவர்களது சிந்தனையைத் தூண்டுவனவாகவும் உள்ளமை பாராட்டுக்குரியது.

மேலைத் தேசங்களோடு ஒப்பிட்டு பார்க்கும் போது "சிறுவர் இலக்கியம்" போன்ற துறைகள் எமது நாட்டில் அருகிக் காணப்படும் வேளையில் இத்தகைய "சிறுவர் பாடல்கள்" திருகோணமலையிலிருந்து வெளிவருவது மகிழ்ச்சி தருவதாகவுள்ளது. பல அரிய கருத்துகளும், கற்பனைத் திறனும் ஓசை நயமும் இந்நூலில் பொதிந்துள்ளன. 'வண்ண நிலவு' என்னும் பாடலில் வரும்

விண்ணை அளந்து நிலவிலே
வீடு கட்ட விரைந்திடு
மண்ணின் வீரன் நீ யென
மகிழ்ப் பயணம் செய்திடு
ஆம்ஸ்ரோங் வைத்த காலடி
அடுத்து வைப்பதாரடி? .........

என்னும் வரிகள் சிறுவர்களின் தேடல் திறனை வளர்த்தெடுப்பதாக அமைகின்றது. அத்தோடு நூலாசிரியர் ஆரம்ப விஞ்ஞானக் கருத்துகளை செயற்பாட்டின் மூலம் எடுத்துக் காட்டி சிறுவர்களுக்கு சேர்ந்தியங்கும் மனப்பாங்கினை வளர்த்துச் செல்ல முற்பட்டுள்ளார். இந்நூலில் வரும் சகல பாடல்களும் ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து பாடத்தக்கவை. பல்வேறு சூழ்நிலைகளால் சிறுவர்களின் மனோநிலை பாதிப்புக்குள்ளாகி நடத்தைக் கோலங்களில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தி வரும் தற்காலத்தில் சிறுபராயத்திலிருந்தே உலகினைப் பற்றிப் புரிந்து கொள்ள இப்பாடல்கள் துணை புரியும் என திடமாக நம்பலாம். இத்தகைய "மனதுக்கினிய பாடல்கள்" என்னும் சிறுவர் நூல் வெளிவருவதற்கு காரணமாகவிருந்த நூலாசிரியரைப் பாராட்டுவதோடு இதே நோக்கம் கொண்ட பல இலக்கியங்கள் அவர் வாயிலாக வெளிவர எனது இதய பூர்வமான வாழ்த்துகள். கல்வி உலகம் இந்நூலை வாங்கி பயனை யடையும், ஆதரவு நல்கவும் யாசிக்கின்றேன்.

தி / ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருகோணமலை.

திருமதி.சந்திரா பாலசுப்பிரமணியம்
அதிபர்.

# முன்னுரை

சிறுவருக்கு என்று எழுதும் போது அவர்களாகவே நாம் மாற வேண்டும். அவர்களது மனநிலைக்கும், அறிவுக்கும் ஏற்ற வகையில் மொழியைக் கையாள வேண்டும். சிறுவர்களது விருப்பு வெறுப்புகளைப் புரிந்து கொள்ள வேண்டும். சிறப்பாகச் சொல்வதாயின் ஆரம்ப வகுப்புகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பங்கேற்று அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

ஆடுவதும், ஓடுவதும், பாடுவதுமாய் படு சுறுசுறுப்பாகச் சிறார்கள் இயங்குவர். அதற்கேற்ப நமது பாடல்கள் அமைய வேண்டும். பாடல்கள் எளிய ஓசை நயங்களைக் கொண்டமைய வேண்டும். சிறுவருக்கான பாடல் இசைக் கோலமாய் அமைய வேண்டும். எந்த மெட்டிலும் பாடக்கூடிய அமைப்பில் எழுத வேண்டும்.

சிறுவர்களுக்காக எழுதும் போது மிகக் கவனமாக எழுத வேண்டியது அவசியம். கணிதம் போன்றதே கவிதையும். எதுகை, மோனை கொண்டு தாள லயத்தோடு, ஓசை இன்பம் கொண்டதாய் எழுத வேண்டும்.

சிறார்களின் உள்ளத்தில் அன்பும், அறமும், நேர்மையும் துளிர்விடும் கருத்துகளோடு மனித நேயத்தை வலியுறுத்தும் கருக்களும் முளை விட்டு மலர வேண்டும்.

இவ்வகையிலேயே எனது சிறுவர் பாடல்கள் அமையும்படி எழுதி வருகிறேன். எனது சிறுவர் இலக்கியத்திற்கு கல்வி உலகம் தரும் ஆர்வம் போற்றுதற்குரியது. அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்விமான்கள் காட்டும் கரிசனையினால் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன்.

இந்நூலை கணனியில் அழகாக எழுத்தமைத்த திரு.இ.சிவகுமார், அட்டைப் படத்தோடு உள் ஓவியங்களையும் வரைந்த எனது மகன் திரு.ச.அ.அருள்பாஸ்கரன், அச்சாக்கம் செய்த திரு.மு.கமலநாதன், இந்நூலை படித்து அணிந்துரை தந்த ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி.சந்திரா பாலசுப்பிரமணியம், பின் அட்டையில் அறிமுகவுரை தந்த தி/ விவேகானந்தா கல்லூரி அதிபர் திரு.சி.நவரத்தினம் ஆகியோர் என்றென்றும் நன்றிக்குரியவர்கள். சிறப்பாக இந்நூலைப் படிக்கவிருக்கும் மாணவர்களுக்கு என் வாழ்த்துகள். இந்நூல் ஆரம்பக் கல்வி கற்கும் மூன்றாம் தரம் தொடக்கம் ஐந்தாம் தரம் வரையுள்ள மாணவ மாணவியருக்குப் பெரிதும் பயன்படக் கூடியது. உங்கள் அனைவரது ஆதரவையும் நாடி நிற்கின்றேன்.

ஆலங்கேணி
கிண்ணியா.

ச.அருளானந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


1. அம்மா பாடும் பாட்டு
2. கண்ணழகுச் சிட்டு
3. கேளுங்கள்
4. பாடுவோம்
5. பழகிக் கொள்
6. அதிகாலையில்
7. வாழ்ந்து காட்டுவோம்
8. தோட்டமும் பறவைகளும்
9. கிளி அக்கா
10. இலங்கைத் தீவு
11. புதுமைகள்
12. வீட்டைத் தேடு
13. உழுத்தம் பணியாரம்
14. வெயிலும் மழையும்
15. வானொலி
16. முயன்று பார்
17. முதியோரை மதிப்போம்
18. சின்ன வண்ணச் சிலந்தியார்
19. மழைத்துளி
20. வண்ண நிலவு
21. அதிசயம் பார்
22. பயணம்
23. ஓடிப் பழகு
24. கடலும் பயனும்
25. வானும் மரமும்
26. பள்ளி செல்வோம்
27. தாயும் சேயும்
28. சோடிக் காளைகள்
29. வதைப்பதேனோ?
30. இறைவன் படைப்பு
31. சேர்ந்து ஆடுவோம்
32. ஏழ்மை போக்குவோம்
33. ஊசி மிதக்கும்
34. காளான் குடை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா பாடும் பாட்டு

சின்னச் சின்னப் பாட்டு – நாம்
சேர்ந்து பாடும் பாட்டு.
அன்னைக் கூறும் பாட்டு – நல்
அறிவை ஊட்டும் பாட்டு.



ஆடிப் பாடும் பாட்டு - அம்மா
அணைத்துப் பாடும் பாட்டு.
கூடி மகிழும் பாட்டு – நம்
குணம் வளர்க்கும் பாட்டு.

திருக் குறளை ஓதும் - அதில்
சிலம்பு கதை மோதும்.
தரும நெறி பாடும் - மனச்
சாந்தி வந்து கூடும்.

தேடித் தெய்வம் வாழ்த்தும் - நம்மை
தீந் தமிழில் ஆழ்த்தும்.
பாடிப் பாடி மகிழ்வோம் - அன்னை
பாட்டைப் பாடி வாழ்வோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணழகுச் சிட்டு.



கண் அழகுச் சிட்டு - என்
கருத்துக் கினிய மொட்டு.
எண்ணம் நிறைந்த முத்து - எம்
இதயம் நிறைந்த சொத்து.

அன்னை வாழ்வு சிறக்கும் - உன்
அறிவு ஊன்றிச் சுரக்கும்.
என்னை ஊரார் புகழ்வார் - அப்பா
எண்ணிப் பார்த்து மகிழ்வார்.

அண்ணன் அக்கா வருவார் - பரிசு
அன்பு நண்பர் தருவார்
மண்ணில் வாய்த்த செல்வம் - எம்
மனதில் புரளும் வெள்ளம்.



உலகம் வாழ வேண்டும் - உன்னை
ஊரார் புகழ வேண்டும்.
பலதும் கற்க வேண்டும் - இந்த
பாரை உயர்த்த வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேளுங்கள்




அம்மா சொல்வதைக் கேளுங்கள்
அன்பாய் சேர்ந்து வாழுங்கள்
அம்மா உங்கள் உளவுறுதி
அப்பா உங்கள் உடலுறுதி.

அன்பும் அறமும் போற்றுங்கள்
அடுத்தவர் துயரைப் போக்குங்கள்
என்றும் இறைவனைப் போற்றுங்கள்
இறையருள் பெற்றுமே வாழுங்கள்.

விரும்பியே உதவிகள் செய்யுங்கள்
மேலோர் வாழ்த்தைத் தேடுங்கள்
குருவழி காட்டி துணைவருவார்
கூடி வாழ்ந்திட வழிதருவார்.

கல்வி நமதிரு கண்ணாகும்
கடமையே நமதரும் சொத்தாகும்
செல்வழி புரிந்து செல்லுங்கள்
செல்வம் சேரும் வெல்லுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடுவோம்



ஓடி வாங்க பாலர்காள்
ஒன்றாய் பள்ளி செல்லுவோம்
கூடி ஆடிப் பள்ளியில்
கூட்டம் போட்டுப் பாடுவோம்.

வகுப்பைச் சுத்தம் செய்குவோம்
வளைந்து நிமிர்ந்து கொள்ளுவோம்
சுகத்தை வாழ்வில் தேக்குவோம்
சொர்க்கம் சேரும் ஆடுவோம்.



சந்தை வீடு கட்டுவோம்
சாமான் விற்று வாங்குவோம்
பந்தை உருட்டி வீசுவோம்
பாட்டுப் பாடி ஓடுவோம்.

ஆடிப் பாடிக் காட்டுவார்
ஆசான் அன்பை ஊட்டுவார்
தேடி அறிவை பெருக்குவோம்
தேசம் வாழப் பாடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழகிக் கொள்

பற்பொடி கையில் எடுத்துக்கொள்
பற்களை நன்றாய்த் துலக்கிக்கொள்
சொற்படி வாயைக் கழுவிக்கொள்
சுகமாய் இருக்கும் குளித்துக்கொள்.

அழகாய்ச் சட்டையைப் போட்டுக்கொள்
அம்மா சொல்வதைக் கேட்டுக்கொள்
பழகிப் பாலைக் குடித்துக்கொள்
பதமாய் உடலைப் பார்த்துக்கொள்.

புத்தகம் கையில் எடுத்துக்கொள்
பேனா பென்சில் தேடிக்கொள்
சுத்தமாய்க் காலணி துடைத்துக்கொள்
சோடி பார்த்துமே அணிந்துகொள்.



பாடம் தன்னில் கவனம்கொள்
படிப்பு முக்கியம் நினைவில்கொள்
கூடும் அறிவைத் தேடிக்கொள்
கூடியே வாழ்ந்திடப் பழகிக்கொள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிகாலையில்

காலையில் கோழி கூவுமடா - விழி
காகம் கரைந்து எழுப்புமடா
சோலைகள் எங்கும் குயிலின்குரல் - அந்தச்
சுந்தர இசையுடன் சேருமடா.




பூனை நாய் நிமிர்ந்து வால்முறுக்கும் - புதுப்
பூக்களும் மலர்ந்து தேன்சுரக்கும்
தானைத் தலைப் பசு முன்நடக்கும் - பின்
தொடர்ந்துமே மாடுகள் தான்நடக்கும்.

சுறுசுறுப் பாகி எறும்புகளும் - ஒன்று
சேர்ந்துமே உணவினைச் சேகரிக்கும்
விறுவிறு எனவே தேனிகளும் - விரைந்து
வதையினில் தேனைச் சேர்த்தடைக்கும்.



நல்லவை நாமும் அறிந்திடவே - என்றும்
நம்மது சூழலே துணையாகும்
நல்லவை கற்று நாமுயர்வோம் - நம்
நாடு செழித்திடத் தினமுழைப்போம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்து காட்டுவோம்.





பாடசாலை சென்று நாங்கள்
படிக்கப் போகிறோம் .
ஆடிப்பாடி மகிழ்ந்து ஒன்றாய்
வாழப் போகிறோம்.



எங்கள் வகுப்பைச் சுத்தம்செய்து
எழிலைக் காணுவோம்.
பொங்கும் அழகுப் பூஞ்செடிகள்
பூக்கும் நாட்டுவோம்.



சேரும் குப்பை கூளங்களை
குழியில் போடுவோம்.
சேர்ந்து அவை பசளையாகும்
தோட்டம் நாட்டுவோம்.

வாழும் வழி திறன்கள்யாவும்
வடிவாய்ப் படிப்போம்.
வாழும் உலகில் நல்லவராய்
வாழ்ந்து காட்டுவோம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டமும் பறவைகளும்.



மரங் கொத்தி மாமா வந்து
மேளம் தட்டுறார்
சிரம் ஆட்டி ஆட்டி ஓணான்
சீட்டி அடிக்கிறார்.

நாவல் மரத்தில் குயிலும் வந்து
நாதம் இசைக்கிறார்
ஆவல் கொண்ட காகக் குஞ்சார்
அசைந்து நடக்கிறார்.

தென்னை மரம் பாளை வெடித்துச்
சிரித்துக் காட்டுது.
புன்னை பூத்துப் புது மணத்தைப்
பரப்பி ஆடுது.

தாவரமும் விலங்கும் சேர்ந்து
தாளம் போடுது.
கேவலமாய் மனிதன் வாழ்க்கை
குலைந்து போனதேன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி அக்கா




கிளி அக்கா நாவல் மரத்தில்
கிக்கீக் பாடுறார்
கிழிந்த வாழை மடலில் மைனா
கீதம் இசைக்கிறார்.

காக மகள் நடம் பயிலக்
குயிலும் பாடுறார்.
சோகம் மறந்து வாத்துக் குஞ்சார்
சேர்ந்து நடக்கிறார்.




ஆந்தை முக்க கானாங் கோழி
அலறிப் பதுங்கிறார்.
பேந்தப் [illegible]ந்த ஆக்காண்டியார்
பயந்து நடுங்கிறார்.



மயில் அண்ணா தோகை விரித்து
வளைந்து ஆடுறார்.
செயல் மறந்து சின்னப் பிள்ளை
சேர்ந்து ஆடுறார் .







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தீவு



இந்து சமுத்திரம் இரைகிறது
இலங்கைத் தீவு மிதக்கிறது.
வந்து பார்க்கும் மனிதரெலாம்
வாழ்த்த இலங்கிச் சிறக்கிறது.



சுற்றி எறிந்து அலைபரவும்
துள்ளும் மீன்கள் கொண்டகடல்
எற்றித் தத்தும் திரவியங்கள்
எங்கும் கிடக்கும் கடற்கரைகள்.

மத்தியில் உயர்ந்து புடைத்திருக்கும்
மலைமுடி சூழ்ந்து நிமிர்ந்திருக்கும்
நித்திய நதிபல ஊற்றெடுக்கும்
நிறைபயிர் விளைந்து பாட்டெடுக்கும்.


தெங்கொடு பனையும் பணப்பயிர்கள்
தேங்கி விளைந்தொன்றாய் ஆடுநிலம்.
இந்தொடு பௌத்தர் கிறிஸ்தவரும்
இஸ்லாம் மக்களும் வாழுநிலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமைகள்



ஒற்றைக் காலில் கொக்குத் தம்பி
உற்றுப் பார்க் கிறார்
முற்றம் நிறைந்து காகக் குஞ்சார்
முறைத்துப் பார்க் கிறார்


இரண்டு காலில் மனிதன் மட்டும்
எழுந்து நடக் கிறான்
வெருண்டு காட்டில் சில மிருகம்
வியக்க நடக் குமாம்

நாலு காலில் ஆட்டுக் குட்டி
நடந்து திரிகி றார்
பாலும் குடித்துக் கன்றுக் குட்டி
பாய்ந்து துள்ளு றார்



எட்டுக் காலில் நண்டுத் தம்பி
எப்படி ஓடு றார்
எட்டி இடம் வலமும் பார்த்து
இனிதாய் ஓடு றார்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டைத் தேடு.



வீடு ஒன்றைத் தேடு - அதில்
வாழும் முறையில் வாழு.
தேடு செல்வம் கூடும் -உயர்வு
தேடி வந்து ஆடும்.

மழை பெய்யும் போதும் - கடும்
வெயில் காயும் போதும்.
களைத்து வந்த போதும் - எமைக்
காக்கும் நல்ல வீடு.

நோய்கள் வாட்டும் போதும் - மெல்ல
நாடி தளர்ந்த போதும்
பாய் விரித்துச் சாய்ந்து - அதில்
படுத்து உறங்க ஓயும்.

கறையான் புற்றும் வீடே - குருவி
கட்டும் கூடும் வீடே
நிறையும் மனித வாழ்வின் - இறுதி
நிலையும் அந்த வீடே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழுத்தம் பணியாரம்.

அம்மா அடுக்குப் பண்ணினள்.
அடுப்பில் தீயை மூட்டினள்.
சும்மா கிடந்த தாச்சியை
தூக்கி அதிலே வைத்தனள்.



எண்ணெய் ஊற்றி விட்டனள்
எழுந்த ஒலியை ரசித்தனள்.
சின்னப் பெண்ணாய் சிரித்தது
சிலிர்த்து எண்ணெய் பொரிந்தது.


உழுத்தம் மாவை எடுத்தனள்
உருட்டி உருட்டிப் பிசைந்தனள்
அழுத்தி அழுத்தித் தட்டினள்
அதற்குள் எதையோ திணித்தனள்

கொதிக்கும் நெய்யில் இட்டனள்
கிளறித் தட்டால் விட்டனள்.
குதித்துப் புரண்டு வந்தது
குண்டாய் உழுத்தம் பணியாரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெயிலும் மழையும்



வரண்டு பயிர்கள் வாடின
வரட்சி எங்கும் சாடின
புரண்டு விலங்கும் சோர்ந்தன
புவியில் வறுமை உணர்ந்தன.

கடலும் பொங்கி ஆர்த்தது
காற்றும் மூசி விரைந்தது.
சுடராய்ச் சிவந்த சூரியன்
சீறி வானில் தோன்றினன்



உயிர்கள் துயரைக் கண்டனன்
உறுமிக் கடலை வறுத்தனன்
உயர்ந்து கடல்நீர் ஆவியாய்
உணர்ந்து வானில் பரந்தது .


மழையும் அடித்துச் சொரிந்தது
மரமும் செடியும் மகிழ்ந்தது
பிழைத்து உயிர்கள் ஆடின
போற்றிப் புகழ்ந்து வாழ்த்தின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலி



மலை நிறைந்த வெளியிலே
மனிதன் கூவி ஒலித்தனன்
மலையில் மோதி ஒலியலை
வந்து காதில் ஒலித்தது.

மீண்டு கிணற்றுள் கூவினன்
மகிழ்ந்து துள்ளிக் குதித்தனன்
தூண்டும் அறிவு துளிர்த்தது
செயலாய் வடிவம் பெற்றது.



ஒலியின் அலையை அறிந்தனன்
ஒலியைப் பதிவும் செய்தனன்
ஒலியைக் காற்றில் பரப்பினான்
ஒலிக்கப் பெட்டி ஆக்கினான்.

வான் பரப்பில் ஒலியலை
வந்து வட்டம் அடிப்பதை
வானொ லியில் கேட்கிறோம்
விந்தை கண்டு மகிழ்கிறோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயன்று பார்





நீல வானம் விரிந்து கிடக்குது
நீந்தி மேகம் கோலம் காட்டுது
கோலச் சிறகை பறவை விரிக்குது
கூடி மகிழ்ந்து பறந்து காட்டுது.

மரஞ் செடிகள் வளரத் துடிக்குது
மலரும் காயும் விளைந்து சொரிக்குது
பரந்து விலங்கு பாய்ந்து திரியுது
பாரில் உயிர்கள் மகிழ்ந்து வாழுது.

பறவை போல பறக்க ஆசையா
பாடி நீரில் நீந்த ஆசையா
சிறகு செய்து பொருத்திப் பார்த்திடு
சிகரம் வரை சென்று பார்த்திடு.



நினைப்பதை நீ செய்து முடிக்கலாம்
நிறைந்த உழைப்பால் உயர்ந்து காட்டலாம்
அனைத்தும் உன்னால் ஆக வேண்டுமே
அதற்கு முயன்று கல்வி கற்றிடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரை மதிப்போம்

இடறி இடறி முதியவர்
எழுந்து விழுந்து நடந்தனர்
கிடந்த கல்லில் இடறியே
கிழவர் சரிந்து விழுந்தனர்.

தாகம் பசி இரண்டுமே
தாக்க வாடிச் சோர்ந்தனர்
சோகம் கொண்ட சிறுவர்கள்
தூக்கி அவரை ஏந்தினர்.


தப்பி நீரால் கழுவினர்
துடைத்து நிமிர்த்தி எழுப்பினர்
அப்பா தாங்கித் தூக்கினார்
அம்மா உணவை ஊட்டினார்

களைப்புத் தீர்ந்த முதியவர்
கண்ணால் நன்றி கூறினர்.
உழைத்துக் களைத்த முதியரை
உவந்து போற்றி வாழுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சின்ன வண்ணச் சிலந்தியார்

சின்ன வண்ணச் சிலந்தியார்
சறுக்கும் குழாயுள் ஏறினர்
உன்னிப் பெய்த மழையினால்
உதைக்க வந்து விழுந்தனர்.

சேறும் நீரும் சேர்ந்ததால்
சிக்கி அவதிப் பட்டனர்.
கூற வார்த்தை இன்றியே
கூடிச் சிறுவர் வாடினர்.

வெப்பக் கதிரோன் வந்தது
வற்றி மழைநீர் போனது
தப்பி எழுந்த சிலந்தியார்
தாவி மீண்டும் ஏறினார்.

கண்ட சிறுவர் ஆடினர்
களித்துப் புரண்டு பாடினர்
நன்றி இறைக்குக் கூறினர்
நலமே வாழ்த்திப் பாடினர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மழைத்துளி

சின்னச் சின்னத் தூறலாய்
சிந்தும் வான மழைக் கொடி
பின்னி ஒன்றாய்ச் சேர்ந்துமே
மண்ணில் ஊர்ந்து போகுது

பள்ளம் பார்த்துப் பதுங்குது
பாய்ந்து குளமாய் ஆகுது
வெள்ளம் சேர்ந்து கொண்டது
மிதந்து கப்பல் ஆடுது

காற்றும் குளிரும் சேர்ந்தது
கலந்து நிலத்தைத் தடவுது
சேற்று நிலத்தில் தாமரை
தலையை நீட்டிக் காட்டுது


நிலமும் குளிர்ந்து கொண்டது
நீரை உறிஞ்சி மகிழ்ந்தது
வளத்தைப் பெருக்கித் தருகுது
மனிதர் வாழ்வும் பெருகுது .






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வண்ண நிலவு



வண்ண நிலவைப் பாரடா
வந்து வானில் நீந்துது.
கண்ணில் ஒளியை ஏற்றுது
களித்து மனமும் போற்றுது.



கூனற் பிறையாய் தெரியுது
கூடி நாளும் வளருது
வானம் பூத்து மகிழுது
வணப்பும் பெற்று நெளியுது.



விண்ணை அளந்து நிலவிலே
வீடு கட்ட விரைந்திடு
மண்ணின் வீரன் நீயென
மகிழப் பயணம் செய்திடு.


ஆம்ஸ்ரோங் வைத்த காலடி
அடுத்து வைப்ப தாரடி ?
நாம்தான் என்று செயற்படு
நம்பிக் கல்வி கற்றிடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிசயம் பார்



உப்புக் கடல் காற்று வந்து
ஊதும் காதிலே
கப்பல் ஆடிக் குதித்து நீந்தும்
கடலின் அலையிலே

இரும்புத் துண்டைக் கடலுள் போட
இறங்கித் தாழுது
துரும்பு ஒன்றைத் தூக்கிப் போட
துள்ளி மிதக்குது.

உப்பைக் கொஞ்சம் நீரில் போட்டால்
உடனே கரையுது
தப்பிக் கல்லை எறிந்து விட்டால்
தாழ்ந்து போகுது.

பாரம் உள்ள பொருள்கள் யாவும்
பதுங்கும் நீரினுள்
பாரம் இல்லா எந்தப் பொருளும்
பாடி மிதக்குமாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பயணம்

சக்குப் புக்குச் சத்தம் போட்டு
சின்னக் கோச்சி போகுது
திக்கு முக்குத் தாளம் போட்டு
மாட்டு வண்டி ஓடுது





கரிய தாரின் வீதி மேலே
காரும் வஸ்சும் ஊருது
விரியும் நீலக் கடலின் மீதே
விரைந்து கப்பல் நீந்துது

நீல வானில் காற்றைக் கிழித்து
நீந்தி ஊர்தி பறக்குது
காளை மாடு இழுக்க வண்டி
குன்று குழியில் செல்லுது



கால் நடையில் சென்ற மனிதன்
கண்டு கொண்ட கல்வியால்
கால வெள்ளம் தன்னைக் கடந்து
காத தூரம் செல்கிறான்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஓடிப் பழகு

ஓடிப் பழகி ஆடு - உடல்
உறுதி கொள்ளும் பாடு
கூடிச் சேர்ந்து வாழு - எந்தக்
குறையும் இல்லைக் கேளு.



ஓடு பாதை இருக்கும் - அங்கு
ஒதுக்கி இடமும் கிடக்கும்
பாடு பார்த்துப் பழகி - நீ
பதமாய் ஓட வேண்டும்.

இடது காலை ஊன்று - பின்
இருகை முன்னால் ஊன்று
பிடரி சிலிர்க்க ஓடு - உன்
பின்னால் வெற்றி ஆடும்.



கல்வி வாழ்க்கை ஆகும் -அதைக்
கற்றல் படினம் ஆகும்
உள்ளம் விரும்பிச் செய்தல் - அதில்
ஊறித் திளைத்தல் கல்வி.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடலும் பயனும்

உலகம் கோள வடிவமாம்
உள்ள கடலும் பெரியதாம்
தளம்பிக் கடல்நீர் நிலத்தையும்
தட்டித் தட்டிச் சிதைக்குதாம்.

காற்று வந்து மோதுது
கடலும் துள்ளிப் பாயுது
சீற்றம் கொண்டு கடலலை
சினந்து கரையை வாருது.


கடலில் பயணம் செய்யலாம்
கட்டுத் தோணி செலுத்தலாம்
கடலில் மீனும் பிடிக்கலாம்
கறிக்கு உப்பும் எடுக்கலாம்.

நீச்சல் அடித்துப் பழகலாம்
நீந்திக் கரையில் குதிக்கலாம்
கூச்சல் போட்டு ஆடலாம்
கூடி ஆடிப் பாடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வானும் மரமும்.

புயலாய் காற்று வீசும்
புழுதி வானில் பூசும்
உயர்ந்த மரங்கள் துடைப்பம்
எடுத்து வானைத் துடைக்கும்.



உயர்ந்து மரங்கள் முழிக்கும்
உரசும் கிளையை விரிக்கும்
அயர்ந்த முகிலைத் தடுக்கும்
அணைத்துத் துளியாய் முடுக்கும்

மழையும் வாரி இறைக்கும்
மரமும் கிளையை அசைக்கும்
கலைந்து மேகம் வெளுக்கும்
கனிந்து வானம் களிக்கும்.

வானம் சுத்தம் கொள்ளும்
மரமும் மகிழ்வு கொள்ளும்
வானம் சுத்தம் கண்டால்
மற்று உயிர்கள் வாழும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பள்ளி செல்வோம்

காலையில் பள்ளி செல்வோம்
கடவுளை வணங்கித் துதிப்போம்.
சாலநல் பாடல்கள் இசைப்போம்
தாளங்கள் போட்டுமே நடிப்போம்.

கதைகளைச் சொல்லி மகிழ்வோம்
கற்பனை உருவங்கள் செய்வோம்.
உதவிசெய் மனிதராய் வாழ்வோம்
உலகதில் மகிழ்ச்சியைக் காண்போம்.

எண்ணும் எழுத்தையும் கற்போம்
எழிலுறு சித்திரம் வரைவோம்.
கண்ணென குருவை மதிப்போம்
காற்றென வீட்டுக்கு விரைவோம்.

பெரியோர் சொல்வதைக் கேட்போம்
புரிந்தவர் சொற்படி நடப்போம்.
அரியவை செய்துமே உயர்வோம்
அன்பே உயர்வென இசைப்போம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தாயும் சேயும்.

உயர்ந்த மரம் கிளை பரப்பி
ஓங்கி வளர்ந்து நின்றன.
மயங்கும் மாலைப் பொழுதினிலே
மந்தி பாய்ந்து வந்தன.

நீண்ட வாலை நிமிர்த்தி வளைத்து
நிலத்தில் நடந்து திரிந்தன.
வாண்டுக் குட்டி தாவிப் பாய்ந்து
வயிற்றில் பற்றித் தொங்கின.

மரத்துக் கிளை ஊஞ்சல் ஆட்ட
மகிழ்ந்து ஆடி மயங்கின.
குறு குறுக்த குட்டி சேர்ந்து
குதித்துத் துள்ளிப் பாய்ந்தன.

ஆணும் பெண்ணும் சேர்ந்து சேயை
அணைத்துக் கொண்டு கொஞ்சின.
பேனும் பார்த்துப் பிடித்துக் கடித்து
பாய்ந்து மகிழ்ந்து கெஞ்சின.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோடிக் காளைகள்.

இரண்டு காளை மாடுகள்
இழுக்க வண்டி உருளுது.
புரண்டு எழும்பும் புழுதியும்
புயல் பரப்பிப் பெருகுது.

வண்டிச் சில்லு கடகடக்க
மாட்டு வண்டி வருகுது
சுண்டு வில்லின் அம்புபோல
துள்ளி விரைந்து வருகுது.



காளை வாயில் நுரையெழும்ப
காற்றாய்ப் பறந்து வருகுது.
வாலைக் கிளப்பி வாளிப்பாய்ந்து
வடிவாய் வண்டி இழுக்குது.

சோடி மாடு சேரும்போது
சோக்காய் வண்டி போகுது.
கூடி மனிதர் வாழும்போது
கோடி நன்மை விளையுது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதைப்பதேனோ?






குருவி இனம் வேண்டும்போது
கூடு கட்டி வாழுது.
குரங்கு விலங்கும் தேவைகண்டு
குகை நிழலைத் தேடுது.

பசி எடுத்த போதுமட்டும்
பறவை தேடி உண்ணுது
பசி வயிற்றைக் கிள்ளும்போது
பாய்ந்து விலங்கு தின்னுது.

குருவி கூடு கட்டுதற்குக்
கூலி கொடுத்த துண்டா?
குரங்கு விலங்கு ஒதுங்குதற்கு
குகை மறுத்த துண்டா?

மனிதன் மட்டும் விதிவிலக்காய்
மண்ணில் இருப்ப தேனோ?
மனிதன் வாழ மனிதனுயிரை
வாட்டி வதைப் பதேனோ?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இறைவன் படைப்பு.

கள்ளிச் செடிக்குக் கடவுள் ஏனோ
முள்ளைக் கொடுத்தான்.
கொள்ளை அழகு ரோசாச் செடிக்கும்
கொழுக்கி கொடுத்தான்.



பாயும் புலி சிங்கத்துக் கேன்
நகத்தைக் கொடுத்தான்.
மேயும் பசு விலங்குக்கு மேன்
கொம்பைக் கொடுத்தான்

தன்னைத் தானே காத்துக் கொள்ளும்
சக்தியும் கொடுத்தான்
உன்னை நீயே காப்பாய் என்றே
இறைவன் படைத்தான்



வல்ல இறைவன் மனிதனுக் கேன்
வல்லமை கொடுத்தான்.
எல்லாத் திறனும் பெற்ற மனிதன்
ஏய்த்து வாழ்வதேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்ந்து ஆடுவோம்

சிறுவர் கூடி வந்தனர்
சில்லுக் கோடு ஆடினர்
குறுக்கும் மறுக்கும் பாய்ந்தனர்
குழம்பிக் குறும்பில் ஆழ்ந்தனர்.


ஆட்டம் பிழை என்றனர்
அதட்டிக் கதைத்துக் கெம்பினர்
கூட்டம் இரண்டாய்ப் போனது
கூடிச் சண்டை ஆனது.





அரவம் கேட்ட அதிபரும்
அங்கு வந்து சேர்ந்தனர்.
சிரித்து வாழப் பழகணும்
சினத்தை அடக்கி வாழணும்

கூடி ஒன்றாய் ஆடுங்கள்
கோபம் வேண்டாம் என்றனர்
ஓடிச் சிறுவர் கூடினார்
ஒன்றாய்ச் சேர்ந்து ஆடினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏழ்மை போக்குவோம்

அழுது கொண்டு சிறுவர்கள்
ஆடி அசைந்து வந்தனர்
பொழுது போன பின்னரும்
புலம்பிக் கதறி நடந்தனர்

கந்தல் சட்டை உடம்பிலே
கவலை தூங்கும் முகத்திலே
இந்த வயதில் ஏழையாய்
இருப்ப தெங்கள் பாவமே

எண்ணிச் சொல்லி வெந்தனர்
எரியும் வயிற்றைப் பிசைந்தனர்
அண்ணன் அப்பா பார்த்தனர்
அன்பாய் அழைத்து வந்தனர்


உடுக்க உடையும் கொடுத்தனர்
உண்ண உணவும் கொடுத்தனர்
படுக்க இடமும் ஒதுக்கினர்
படிக்க வழியும் செய்தனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊசி மிதக்கும்




தண்ணீர் வாளியில் எடுத்துக்கொள்
தாள்துண்டு ஒன்றும் தேடிக்கொள்
குண்டூசி ஒன்றையும் பெற்றுக்கொள்
கூர்ந்து கவனமாய்க் கேட்டுக்கொள்.

தாள்துண்டை நீரில் போட்டுக்கொள்
சரியாய் மிதக்குதா பார்த்துக்கொள்
தாளில் ஊசியை வைத்துப்பார்
சங்கதி இனித்தான் உற்றுப்பார்



மெதுவாய் மெதுவாய் தாள்நீரில்
மெல்ல ஊறி உப்பி விடும்
அதுவாய் நீரில் அமிழ்ந்து விடும்
அப்புறம் ஊசியின் நிலையைப் பார்

என்ன நடந்தது பார்த்தாயா
இந்திர வித்தையைக் கேட்டாயா
சொன்ன படிக்கு நீரின்மேல்
சின்ன ஊசி மிதக்குதுபார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளான் குடை



இருண்டு வானம் மழை பொழியும்
ஈரம் கொண்டு மண் குளிரும்
புரண்டு நீரும் குளம் நிறையும்
புதுமலர் பூத்து மரம் சொரியும்.

மெல்ல மெல்ல நிலம் வெடிக்கும்
மெதுவாய் எழுந்து முளைகள் வரும்
உள்ளம் மகிழ்ந்து துள்ளி எழும்
உலக அதிசயம் வியக்க வைக்கும்.

கம்பி இல்லாக் குடை விரியும்
காணும் இடங்களில் அவை தெரியும்
தம்பி கையில் அது மிளிரும்
தண்டு பஞ்சாய் மெது மெதுக்கும்.



மாரி வந்தால் தான் புரியும்
மண்ணில் பற்பல குடை விரியும்
ஊரில் உள்ள யாவ ருக்கும்
உணவாய் காளான் உதவி நிற்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரது நூல்கள்

1. இன்பக்கனிகள்
2. பாட்டுப் பாடுவோம்
3. காகமும் தம்பியும்
4. பாடி ஆடுவோம்
5. கடலும் காவிரியும்
6. சின்னச் சின்னப் பாட்டு
7. மனதுக்கினிய பாட்டு
8. பூஞ்சிட்டுகள்
9. பளிங்குத்தீவு
10. காட்டில் கலவரம்
11. பயங்கொள்ளலாகாது பாப்பா
12. மனதில் உறுதி வேண்டும்
13. மழலை இன்பம்
14. விளையாட்டு வழிக் கல்வி
15. அந்த ஆவணி ஆறு
16. வம்மிப் பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*இந்நூலாசிரியர்.......*

*திரு.ச.அருளானந்தம் அவர்கள், திருகோணமலை, ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் என்னுடன் ஒன்றாகப படித்தவர். ஆலன், கேணிப்பித்தன், இன்னும் பல புனைபெயர்களில் சிறுகதைகள், கவிதை, கல்விக்கட்டுரைகள், விமர்சனக் கட்டுரைகள், சிறுவர் இலக்கியம் என எழுதிக்கொண்டிருப்பவர். உள்ளக்கமலம், சுவைத்தேன், பார்த்தேன், மலைத்தேன், புது ஊற்று, புன்சிரிப்பு ஆகிய இதழ்களுக்கு இதழாசிரியராக இருந்தவர்.*

*பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்த போது, சில்லையூர் செல்வராஜன் தலைமையில் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை போன்ற பல கவிஞர்கள் மத்தியில் திரு. அருளானந்தம் பாடிய நகைச் சுவைக் கவிதை பல்கலைக்கழகத்தைச் சிரிப்பில் ஆழ்த்தியது. சிறந்த கவிஞன். மனத்துக்கினிய நண்பன். இலங்கையில் சிறப்பாக திருகோணமலையில் சிறுவர் இலக்கியத் துறையில் முன்னணியில் திகழ்பவர், உரமூட்டுபவர்.*

*"**மனதுக்கினிய பாட்டு**" சிறுவர்களது மனங்களில் பதியும் வண்ணம் அருமையாக உள்ளது. இவரது பாடல்களை எந்த மெட்டிலும் பாடலாம். ஓசை நயம், எளிமையான, தேர்ந்தெடுத்த சொற்கள், கருத்தாழம், படிப்பினை ஆகியன பொதிந்த இவரது பாடல்கள், ஆரம்பக்கல்விக்கு உதவுவனவாக அமைந்துள்ளன.*

*கல்வி உலகம் உதவு கரம் நீட்டி வரவேற்க வேண்டும். பாடசாலைகள் அனைத்தும் குறைந்தது பத்துப் புத்தகங்களை யாவது வாங்கி பயன்படுத்த வேண்டும். வகுப்புக்களில் அறிமுகம் செய்து படிக்கத் தூண்ட வேண்டும். சிறுவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்துப் பயன் பெறலாம். நமது எழுத்தாளர்களை ஊக்குவிப்போம்.*

*தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி* — *சி.நவரெத்தினம்.*
*திருகோணமலை.* — *அதிபர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org